1st February 1972]

THIRU A. R. DAMODARAN : Sir, this question was asked nine months ago and I do not exactly remember the background, but I was under the impression that in the Government Arts College, Cuddalore, for B.A. in History provision had not been made for English medium. May I know whether it has since been made, Sir ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு கல்லூரியிலும் அப்படி ஏற்படாத நிலையில், ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் நடத்த வசதியில்லாத அரசினர் கல்லூரி ஒன்றுகூட இல்லை என்ற காரணத்திற்காகத்தான், எல்லாக் கல்லூரிகளிலும் அந்த வசதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

Joint Director of Animal Husbandry Department

* 83 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government propose to create a post of Joint Director in the Animal Husbandry Department in Tamil Nadu?

கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர்.

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழ் நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு இணை இயக்குநர் பதவி ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். ஆணையும் பிறப்பித்துள்ளது.

Petroleum Goods

* 84 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether Railway Tank Wagons used for the Transportation of Petroleum Goods are calibrated by the Weights and Measures Department of the Tamil Nadu Government;

(*b*) if so, the fees prescribed for such calibration; and

(*c*) whether any representation has been received by the Controller of Weights and Measures that these wagons having been improperly calibrated, or not calibrated at all, do not deliver the quantities alleged to be carried?

பெட்ரோலியம் பொருட்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பெட்ரோலியம் பொருட்களை ஏற்றிச் செல்லும் ரயில் வாகன் தொட்டிகள் (Railway Tank wagons) தமிழ் நாடு அரசு எடை-அளவைத் துறையால் அளவை செய்யப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அவ்வாறு அளவை செய்வதற்காக வரையறுக்கப்பட்ட கட்டணம் யாது ?

[1st February 1972

(உ) இந்தத் தொட்டிகள் சரியாக அளவை செய்யப்படவில்லை அல்லது இவை அளவையே செய்யப்படவேயில்லை என்றும் அவை ஏற்றிச் செல்லுவதாகக் கூறப்படும் சரக்குகளைச் சேர்ப்பதில்லை என்றும் எடை-அளவை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the administration of 'Weights and Measures' is with the State Government. May I know when fees are prescribed for calibration of petrol pumps and tank lorries, why exemption should be granted by the State Government in the case of calibration of railway tank wagons?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, ரயில்வே எண்ணை வண்டிகளின் அளவைகளைப் பரிசோதனை செய்வது மாநில அரசு எடை-அளவைத்துறையா மத்திய அரசுத் துறையா என்பது மூன்றாண்டுகளாகப் பரிசிலனையில் இருந்து வந்தது. 1971-ல் தான் மாநில அரசு எடை-அளவைத் துறை ஆய்வாளர்களே ரயில்வே எண்ணெய் வண்டி அளவைகளைப் பரிசோதனை செய்யலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ரயில்வே ஜெனரல் மானேஜரோடு கடிதப் போக்கு வரத்து நடைபெற்றது. பரிசோதனைக்கான அலுவலாளர்கள், மற்ற விவரங்களை எல்லாம் ரயில்வே மானேஜரிடம் கேட்கப்பட்டிருக்கின்றன. விவரம் கிடைத்தவுடன் ரயில்வே எண்ணெய் வண்டிகளின் அளவைகளைப் பரிசிலனை செய்ய மாநில எடை-அளவைத் துறை ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

THIRU A. R. DAMODARAN : It has been reported, Sir, that many of these Railway tank wagons have been short delivering to agents and dealers who have received such wagons and that itself is in contravention of the Weights and Measures Act. May I know, therefore, whether the Government of Tamil Nadu will speedily take action, because for each wagon, they should also pay calibration fees of Rs. 500 or Rs. 600 ? Such exemption should not be granted in the case of Railway tank wagons.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அது குறித்து கடலூரிலுள்ள அகில இந்திய பெட்ரோல் வியாபாரிகள் ஃபெடரேஷனிலிருந்து முறையீடு ஒன்று வந்திருக்கிறது. அவர்கள் நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

Mango Juice

* 85 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a large quantity of mango juice is being exported from North Arcot District during 1971 to foreign countries; and

(b) if so, the details thereof?